## இலங்கை பத்திரிகை பேரவை 2013

இலங்கை பத்திரிகை பேரவையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2013

திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவையால் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டியின் கைக்குத் தேறிய பெறுமதி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 13,500 ஆக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்பாட்டிலுள்ள அவ் வண்டி இலங்கை பொதுத் துறைக் கணக்கு நியம இல. 7 இன் பிரகாரம், மீளப் பெறுமதியிடப்பட்டு மீள்பெறுமதியிடப்பட்ட பெறுமதி கணக்குகளிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கு நியம இல. 7 இன் பிரகாரம், நிலையான சொத்துக்கள் பயன்பாட்டு நிலைக்குக் கொண்டுவரப்பட்ட நாள் முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பல சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 285,500 தொகையான நிலையான சொத்துக்கள் 2013 ஆம் ஆண்டிற்காகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 47,708 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, பத்திரிகை ‘‘கலா சமீக்ஷா’’ புத்தக இருப்பின் பெறுமதி ரூபா 15,250 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பத்திரிகை வாசிப்புத் திறனுடையோர் ஆய்விற்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 343,800 தொகை கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது வாகனப் பராமரிப்புச் செலவினத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 44,180 தொகை நிலையான சொத்தாக கணக்கிடப்பட்டமையை மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கைக்குத் தேறக் கூடிய பெறுமதி கழிக்கப்பட்ட கிரயமான ரூபா 125,216 தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி பேரவையின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் படி மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்விடப்பட்டிருக்கவில்லை. இதன் படி, மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 25,043 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் படி செயற்பட்டிராமை தொடர்பாக 2012 ஜூலை 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் மீதான குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. பேரவையின் அலுவலக வளாகம் அரசாங்கக் கட்டிடமொன்றிற்கு கொண்டு செல்லப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் பேரவை இதன் படி செயற்பட்டிருக்கவில்லை. இவ்வாறே நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் பல இடங்களில் வாடகை அடிப்படையில் அலுவலகம் இயங்கியிருந்தது. 2006 முதல் 2013 ஆம் ஆண்டு வரை மாத்திரம் வாடகையாக ரூபா 9,410,500 செலவிட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பேரவையின் நடவடிக்கைகளால் விளைந்த நிதிசார்

விளைவு மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுப்பதற்கு முன்னர் ரூபா 20,778,955 பற்றாக்குறையானதுடன் மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து ரூபா 18,983,750 பெறப்பட்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 1,795,205 ஆகியது. இதனோடொத்த முன்னைய ஆண்டின் நிதிவிளைவு மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுப்பதற்கு முன்னர் ரூபா 16,680,648 பற்றாக்குறையாகியது. மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரூபா 16,601,000 மானியத்தின் பின்னர் அது ரூபா 79,648 பற்றாக்குறை ஆகியது. மீளாய்வாண்டிற்கான அரசாங்க மானியம் ரூபா 2,382,750 தொகையால் அதிகரித்திருந்த போதிலும் பேரவையின் மொத்தச் செலவினம் ரூபா 3,832,123 ஆல் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதிவிளைவுகள் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாகியிருந்தன.

## 3.2 செலவினங்களின் அசாதாரண அதிகரிப்பு

செயலமர்வுகள், பாடநெறிகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏற்கப்பட்ட மொத்தச் செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 94 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 582,832 கூடுதலாகச் செலவிட்டிருந்ததுடன் 40 ஆவது ஆண்டு நிறைவிற்காக ரூபா 2,169,110 தொகையான கிரயம் ஏற்கப்பட்டிருந்தமை இச் செலவின அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைகத் திட்டத்துடன் ஒப்பிடப்படுகையில் செயற்படுத்தப்படும் பணிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | திட்டமிடப்பட்டது | | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | இலக்கு | நிதி ஏற்பாடு<br>ரூபா | உள்ளபடியானது | நிதி |
| முறைப்பாடுகளை விசாரித்தல் | 75 | - | 38 | - |
| பத்திரிகைகளைப் | 200 | - | 189 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| பதிவுசெய்தல் | | | | |
| இணையதளங்களைப் பதிவுசெய்தல் | 50 | - | - | - |
| செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடாத்தல் | 12 | 1,000,000 | 8 | 1,439,567 |
| டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தல் | 01 | 750,000 | 01 | 466,554 |
| தொழிற்திறன் ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு | 02 | - | - | - |
| நூல் அச்சீடு – ஊடக ஆய்வு II (100 பிரதிகள்) | 01 | 500,000 | 01 | 265,625 |
| - பல்துறை தொடர்பாடல் | 05 | - | - | - |
| பத்திரிகை வாசிப்பு தொடர்பான ஆய்வு | 01 | 1,000,000 | - | 553,200 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது புதினப் பத்திரிகைகளுக்கு எதிராக 61 புகார்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்படாத 21 புகார்கள் உள்ளடங்கலாக 82 புகார்கள் தீர்த்துவைக்க வேண்டியுள்ளன. அதில் 24 புகார்கள் 2014 மே 25 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, மாவட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பாடசாலை ஊடகவியலாளர் 12 செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 1,000,000 தொகையான ஏற்பாட்டை வழங்கியிருந்தது. எவ்வாறெனினும், 8 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு இதற்காக ரூபா 1,439,567 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 50 இணையதளங்களைப் பதிவு செய்வதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஏப்ரல் மாதம் வரையிலும் இந் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதி உயர் தொழிற்தகைமை வாய்ந்த ஊடகத்துறையை ஏற்படுத்துவதற்காக 05 பல் தொடர்பாடல் நூல்களை அச்சிடுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்திரிகைப் பேரவையால் 2010 ஆம் ஆண்டு முதல் மூன்று ஊடக டிப்ளோமா கற்கை நெறிகளும் ஒரு ஆங்கில சான்றிதழ் கற்கை நெறியையும் நடாத்தியிருந்ததுடன் அதனோடிணைந்த பின்வரும் முகாமைத்துவ நலிவுகளைக் காணக்கூடியதாக இருந்தது.

(i) நான்கு பாடநெறிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 2,449,997 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், பாடநெறிக்காக அறவிடப்பட்ட மொத்தக் கட்டணம் ரூபா 834,500 தொகையானமையால் பேரவையின் நிதிகளிலிருந்து ரூபா 1,615,497 தொகையான மேலதிகக் கிரயத்தை ஏற்க வேண்டியிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட ஆங்கிலச் சான்றிதழ் பாடநெறிகளில் பங்குபற்றியவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் பாடநெறிக் கட்டணமான ரூபா 525,000 தொகையில் ரூபா 82,500 மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 222,188 ஆகும். பங்குபற்றியவர்களில் 95 சதவீதமானோர் தொழில்சார் ஊடகவியலாளர்கள் ஆவர். பாடநெறி ஆரம்பிக்கும் போதே இத்தொகையை அறவிடுவதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011/2012 கல்வி ஆண்டிற்காக 2011 யூலையில் ஆரம்பமாகிய ஊடக டிப்ளோமாக் பாடநெறிக் கட்டணமாக ஏறத்தாழ ரூபா 600,000 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 268,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(iv) 2012 நவம்பர் 05 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் படி, பாடநெறிச் செலவினத்தைத் தீர்ப்பதற்கு இயலுமான வகையில் கட்டணம் திருத்தப்பட்டிருந்த போதிலும் இதில் பாடநெறிக்கான செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மேற்குறித்தவாறு பாடநெறிக்காக மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பாடநெறியை விட்டுச் செல்பவர்கள் 50 சதவீதமாகக் காணப்பட்டது. பாடநெறியை விட்டுச் செல்லும் சதவீதம் அதிகரிப்பதற்கான காரணம் யாதென்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு பாடநெறி ஒழுங்கமைப்புக் குழுவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பத்திரிகைப் பேரவை ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் பூர்த்தியைக் கொண்டாடும் நோக்கில் 2013 செப்தெம்பர் 23 ஆம் திகதி ரூபா 2,169,110 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு ஓர் விழா நடாத்தப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சிக்காக ரூபா 1,750,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஏற்பாட்டிற்கு மேலாக ரூபா 419,110 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பேரவைக்கு புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு, புதிய உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு தாமதமானமையால் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது 6 பாடசாலை தொடர்பாடல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதில் 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 3 செயலமர்வுகளில் 2 உம், 2013 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 3 செயலமர்வுகளில் 1 உமாக 6 செயலமர்வுகளில் 3 மாத்திரம் கண்டி மாவட்டத்தில் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. இதன் படி செயலமர்வுகள் நடாத்தப்படுகையில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகள் ஊடகச் சங்கங்கங்கள் உள்ள ஏனைய பாடசாலைகள் தொடர்பில்

முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பேரவையால் ஊடகத்துடன் தொடர்பான புத்தகங்களை அச்சிட்டு விற்பனை செய்யப்படுவதுடன் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது அச்சிடப்பட்ட 9 புத்தகங்களின் 4,141 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டிராமையால் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தது. இப் புத்தகங்களின் மொத்தக் கிரயம் ரூபா 530,668 தொகையானதுடன் புத்தகங்களின் விற்பனைப் பெறுமதி ரூபா 723,950 ஆகக் காணப்பட்டது. அச்சிடப்பட்ட புத்தகங்களின் விற்பனை செய்யப்படுவதற்கும் விநியோகிக்கப்படுவதற்கும் முறையான நடைமுறைகள் இன்மை இந் நிலைக்குக் காரணமாகியது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

2013 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்ட ஊடக மெய்மையாய்வு II நூலின் எழுத்துப் பொறிப்பதற்காக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 20,625 செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய காசோலை அந் நிறுவனத்தின் பெயரில் அனுப்பிவைக்கப்படாது பத்திரிகை ஆணையாளரின் பெயருக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறே இக் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதிக்காக நிழற்படப் பிரதி ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பேரவைக்குரிய மோட்டார் வாகனத்தில் காணப்பட்ட ஆசன இருக்கைகள் அகற்றப்பட்டு புதிதாக ஆசனங்களைப் பொருத்துவதற்காக 2013 மார்ச் 17 ஆம் திகதி விலைகள் கோரப்பட்டிருந்ததுடன் அங்கு சேவைகளை வழங்கிய நிறுவனத்தினாலேயே ரூபா 20,000 இற்கும் ரூபா 25,000 இற்கும் இடைப்பட்ட தொகையில் கொள்வனவு செய்யப்படுவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அகற்றப்பட்ட ஆசனங்கள் வேறு வெளி நிறுவனங்களுக்கு ரூபா 10,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஆ) பேரவையால் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக அச்சிடல் நடவடிக்கைகளுக்காக வேறான விலைகள் கோரப்படாது ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதற்காக ரூபா 318,400 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம், அதன் பிரதான நிறைவேற்றுதர உத்தியோக்கத்தரான பத்திரிகை ஆணையாளர் பதவி உள்ளதுடன் 2010 மார்ச் 31 முதல் அமைச்சின் சிபார்சுகேற்ப நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களால் பதில் கடமையாற்றும் அடிப்படையில் அமைந்திருந்தது. அவ்வாறே, முழு நேர உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய இப் பதவிக்காக நிரந்தரமாக நபரொருவர் நியமிக்கப்படுவதற்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்குமாறு 2012 யூலை 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழு நியமிக்கப்பட்ட போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் உரிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 செப்டெம்பர் 02 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் படி பேரவையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் புதிய உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடும் பொதுத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே 2013 ஒக்டோபர் 06 ஆம் திகதி பேரவையின் 09 வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு ரூபா 102,144 செலவிடப்பட்டு பத்திரிகை விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய வெற்றிடங்களில், 01 உதவி ஆணையாளர் பதவிக்காக மாத்திரம் இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக ஆட்சேர்க்கப்படாத காரணத்தால் நாளாந்தக் கொடுப்பனவு

அடிப்படையில் 04 பேர் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 475,305 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையால் 2010 – 2014 காலப்பகுதி வரை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது காலக்கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டிற்காக சபையால் செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட மாவட்ட ஊடகவியலாளர் செயலமர்வு மற்றும் பாடசாலை செயலமர்வுகள் நடாத்தப்பட்டு இடமும் காலப்பகுதியும் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

பேரவையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 1988 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய ஐஏஐ/98/02 ஆம் இலக்க மற்றும் 2011 சனவரி 25 ஆம் திகதிய ஐஏஐ/2011/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(இ) பிரிவின் பிரகாரமும் கணக்காய்வு நியம இல. 610 என்பவற்றில் விதந்துரைக்கப்பட்டதன் படி, சபையின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு உரித்தான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படல், செயற்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் போன்ற நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம், காலாண்டு அடிப்படையில் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 கொள்வனவுத் திட்டம்

2006 ஜனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கை இல. 08 இன் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் 2013 மே 21 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைகளுக்கு உரிய பண்டங்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, சுற்றறிக்கையின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்படுகையில் ஆகக் குறைந்தது 5 விலை கூறல்கள் பெறப்பட வேண்டிய போதிலும் இரு சந்தர்ப்பங்களின் போது ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக 3 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் விலைகள் கோரப்பட்டிருந்தன.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2012 செப்தெம்பர் 27 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. எவ்வாறெனினும், 2013 ஆம் ஆண்டின் 08 மாதங்கள் கடந்ததன் பின்னர் 2013 ஆகஸ்ட் 29 ஆம் திகதி மீளத் திருத்தப்பட்ட பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இத் திருத்தப்பட்ட பாதீடு மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையே 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.7 பொது முயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட கட்டளையை செயற்படுத்தல்

இலங்கை பத்திரிகைப் பேரவை தொடர்பாக 2012 யூலை 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட கட்டளைகளான, அலுவலக வளாகம் அரசாங்கக் கட்டிடத்திற்குக் கொண்டு செல்லல், பத்திரிகை ஆணையாளர் என்ற பதவிக்காக நிரந்தரமாக நபர் ஒருவர் நியமிக்கப்படுதல், உள்ளகக் கணக்காய்வை செயற்படுத்தி கணக்காய்விற்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல், இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பத்திரிகைகளின் வாசிப்புப் பற்றி அங்கத்தவர்களிடமிருந்து மெய்மையாய்வு விரைவாக முடிவுறுத்தல் மற்றும் பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தைத் திருத்துவதற்காக அமைச்சரவைத் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அவை அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற கட்டளைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.8 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவை ஸ்தாபிக்கப்படுவதற்குரிய அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவின் பிரகாரம் பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்களால் உயர் பத்திரிகைக் கலையில் தொழில் தர்மம் பேணப்படுவது குறித்து பொறுப்புக் கூற வேண்டியது பேரவையின் முக்கிய நோக்கானதுடன் மேற்குறிப்பிடப்பட்டவை எய்தப்படுவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த கலைஞர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தொழில் தர்ம முறைமைகள் 1981 இலிருந்து அதாவது கடந்த 33 ஆண்டுகளில் திரும்பவும் அச்சீட்டு ஊடகத் துறையின் சீக்கிரமான அபிவிருத்திக்கு இணையாக திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் சகல பத்திரிகையும் பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபையின் தகவல்களின் பிரகாரம், பதிவு செய்யப்படாது சந்தைக்கு பத்திரிகைகள் விநியோகிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அப் பதிவு செய்யப்படாத பத்திரிகைகளின் பங்காளர்கள் தொடர்பாக பேரவையின்

நடவடிக்கைகளுக்கு தாக்கமளிக்கும் விடயமாகக் கருதி தேவையான சட்டங்கள், விதிகளை வழங்குவதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரம் இருந்த போதிலும் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கற்கைநெறிகளை நடாத்தல்

(இ) கொள்வனவு நடவடிக்கைகள்